தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
**Tamilar Remembrance Foundation - Swiss**
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

**11 வயதுப்பிரிவு**
(01.01.2005 – 31.12.2005 வரையில் பிறந்தோர்)

## தானை நடத்திய தமிழரின் தலைவன்

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்றார் பாரதி. அதற்கிணங்க, எம்மைத் தலைநிமிர வைத்தவர் எங்கள் தலைவர் மாமா. தமிழும் தமிழரும் பெற்ற பெரும் பேறாக, தமிழீழத்தின் வல்வெட்டித்துறை மண் தந்த மணிமகுடம் அவர். தமிழர் குருதியிலே ஆழப்பதிந்த வீரத்தைத் தமிழீழ தேசத்தின் விடுதலை என்ற பெருவிருட்சத்திற்கு உரமாக்கிய பெருமைக்குச் சொந்தக்காரர். கொண்ட கொள்கையில் உறுதியும் விட்டுக் கொடுப்புகள் இல்லாத விடுதலைப்பற்றும் அவரைத் தமிழர் தானைக்குத் தலைவனாக்கியது.

கொடை, இரக்கம், நீதி தவறாமை, கண்போல மக்களைக் காத்தல் போன்ற உயர்குணங்களைத் தானும் பின்பற்றித் தன் தானைக்கும் பயிற்றுவிப்பவனே உண்மையான தலைவன். அத்தகைய சிறந்த தலைமைப் பண்பு, தமிழீழக் கட்டுமானத்திற்கான திட்டமிடல்கள் ஆகியவற்றின் மூலம் தமிழீழத் தனியரசை உருவாக்கும் புறநிலைகளைத் தோற்றுவிக்கச் செய்தவர். கடற்படை, தரைப்படை, வான்படை என்னும் முப்படைகளையும் உருவாக்கித் தனியரசாண்டவர்.

தேசத்தின் நல்லாட்சியிலும் மக்கள் நலனிலும் அக்கறை கொண்டதால் மருத்துவம், கல்வி, பொருண்மியம், மீள்கட்டுமானம் என அவரின் பார்வை நீண்டு விரிந்தது. அதுவே செயலாகத் தோற்றம் கண்டது. பெற்றோரை இழந்த பச்சிளங்குழந்தைகளையும் ஆதரவற்ற மூதாளர்கள், சகோதரிகளையும் செஞ்சோலையும் காந்தரூபன் அறிவுச்சோலையும் அன்புச்சோலையும் இனியவாழ்வு இல்லமும் அரவணைத்தன.

அடுப்பங்கரையில் அடைபட்டுக் கிடந்த பெண்களை வீரப்பெண் புலியாக்கி, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தி, அனைவரையும் உற்று நோக்க வைத்தவர் எங்கள் மாமா. "இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி" என்று கூறி, தமிழர்களுக்கான விடுதலை நோக்கிய பயணத்தை மூச்சாக்கி அதற்கான வழிமுறைகளைச் செதுக்கிய தீரர்.

தமிழீழ விடுதலைக்கு வழிகாட்டும் ஒளியாகி, தானை நடத்திய தமிழரின் தலைவன் எங்கள் தலைவர் மாமா. அவர் எம் தேசத்தின் நிலையான தலைவர்.

நன்றி, வணக்கம்.